உங்கள் இராசிக்கு 3-ம் இடத்தை பார்வை செய்கிற குரு பகவான். வெளிநாட்டில் வேலை வாய்ப்பு வரும். சொந்த கனவுகள் சேரும். மனைவி மூலம் யோகம் அமையும். பெரியவர்கள் ஆசி கிடைக்கும். தெய்வகாரியங்கள் செய்யும் வாய்ப்பு தேடி வரும். பொதுவாக பாக்கியத்தில் அமர்ந்த குரு பகவான் Powerful வாழ்க்கை தருவார் எண்ணெய் இரும்பு நவதானியம் போன்ற வியாபாரத்தில் பெரும் நன்மை கொடுக்கும். சோதனை தரும் போராட்டத்தை கொடுக்கும் குருபெயர்ச்சி இது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாப்பா முரசு

தூக்கம் மகிழ்ச்சியுடன், எனென்றால்
ஒருவனுடைய வாழ்வில் அது பாதியை திருடுகிறது.

வாரம் ஒரு திருக்குறள்

நட்பு

நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு.

நட்புச் செய்தல் ஒருவரோடு சிரித்து மகிழும் பொருட்டு அன்று; நண்பர் தெரிகடந்து செல்லும்போது முற்பட்டுச் சென்று இடித்துரைப்பதற்காகும்.

குறள்:784

டைட்டான் என்றால் என்ன?



நமக்கு இரவுகளில் புதன், வெள்ளி தவிர மற்ற கோள்களுக்கும் துணைக்கோள்கள் இருக்கின்றன. அவற்றுள், பூமி, புளூட்டோ தவிர மற்ற கோள்களில் ஒன்றுக்கு மேற்பட்ட நிலாக்கள் இருக்கின்றன. மொத்தமாக விட்டத்தட்ட 60க்கு நிலாக்களுக்கு மேல் வரும். சனிக்கிரகத்தை சுற்றி வரும் வளையங்களை தனியாக கணக்கெடுத்து தனி நிலாக்களாக பட்டியலிடுகிறது. அப்படி அனுப்பிய படங்களில் ஒன்றுதான் சனியின் துணைக்கோளான டைட்டான். இதன் குழுக்களை 5150 கிலோமீட்டர்கள். இது புதன் கோளைவிட பெருத்தம் பெரியது. இதனுடைய சுவிசேஷ தன்மை என்ன தெரியுமா? பொதுவாக நிலவில் வாயு மண்டலம் என்பதே இருக்காது. ஆனால், இதில் மட்டும் நைட்ரஜன் வாயு அதிகமாக உள்ள வாயு மண்டலம் இருக்கிறது. இதைப் பார்த்ததும், விஞ்ஞானிகள் எல்லோரும் ஆச்சரியப்படுகிறார்கள். இரவான நமக்கு நிலாவிலேயே இரண்டாவது பெரிய அளவுள்ள நிலா இதுதான்.

கடல்கள் தோன்றிய விதம்

பூமியோடு மிக மெல்லிய வாயுவும், பனியாக எரிமலை வெடிப்பாலுமே கலக்கும் சமயத்தில் தான் விளங்கியது. இந்த சமயத்தில் பூமியின் மேற்பரப்பு இருந்து வெப்பக்கல் வெளியேறின. இந்த வாயுக்கள் சேர்ந்து வாயு மண்டலத்தை உருவாக்கின. இதில் பெரும் பங்கு நீராவிதான்.

பூமி குளிர்ச்சியடைந்தும். இந்த நீராவியே ஒடுங்கி மழையாகி தரையை அடைந்து ஆரம்ப காலத்தில் கடல்களை உருவாக்கியது. 3500 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர், 'பாண்டிரா' என்ற கண்டமும், 'டெதிஸ்' என்ற கடலும் மட்டும் காணப்பட்டன. இந்த கண்டம் பிரியத் தொடங்கியதும் தான் இன்றைய நாம் காண்கிறோம், கடல்களும் தோன்றின.

மொழிகள்

உலகில் பேசப்படும் மொத்த மொழிகள் 2 ஆயிரத்து 796.

இவற்றில் பேசப்படும் மொத்த மொழிகள் ஆயிரத்து 652. உலகில் அதிகமானவர்கள் பேசப்படும் மொழி சீன மொழி. ஆங்கிலத்துக்கு இரண்டாவது இடம்.

தமிழில் சுருக்கெழுத்து முறையை உருவாக்கியவர் சீனிவாசராவ். ஆங்கிலத்தில் உருவாக்கியவர் சேர். ஐசாக் பிட்மேன்.

முழுமைப்படுத்துங்கள்



தேர்வுக்கு நன்றாகவே போட்டுப் பார்த்துக் கொண்டிருந்தான் சோமு

ஆனால் இறுதித் தேர்வில் கணக்கில் 100-இருந்த 100 வாங்கிவிட வேண்டும் என்று கருவாக முயற்சித்துக் கொண்டிருந்தான்.

ஒரு கணக்கு மட்டும் அவனுக்கு தெரியவில்லை. அவன் அப்பாவிடம் கேட்டான்.

அவனது அப்பாவும் போட்டுப்பார்த்து விடை வரவில்லை போகவே, "அப்பாவைக் கேள்" என்று சொல்லிவிட்டார்.

"கணக்குப் படிக்கும்போதே கட்டாயம் போட்டாலும் கணக்கு வராது, உன் நண்பன் அரவிந்தனிடம் கேள்" என்று தகவலை அனுப்பினார்.

அரவிந்தனிடம் கணக்கை கேட்டுத் தெரிந்து கொள்வதற்காக அவனது வீட்டை நோக்கி புறப்பட்டான் சோமு. அரவிந்தன் வீட்டில் நுழையும் முன் அவன் கண்ட காட்சி அவனுக்கு ஆச்சரியத்தைத் தந்தது. அங்கே தனது தாத்தா அரவிந்துடன் மாதிரித்தாள் உ சங்கும் நீ நலனை படித்தால் அதுவே போதும்" என்று சொல்லிவிட்டு விடைபெற்றார். எல்லாவற்றையும் மறைத்திருந்த சோகம் சோமுவை வெட்கப்படச் செய்தன.

அப்பாவும், அப்பாவும், என் தாத்தா வை ஒப்பிக்கும். உ ஆமாதுவி என்று ஒதுங்கி சுவர்ரிடு தாக்கள். அதனால் தானும் அவரை கண்டுகொள்ள மாயம் ஒதுங்கினேன்.



தாத்தாவின் பெருமை

உட்கார்ந்திருப்பதைக் கண்டான் சோமு. இங்கே தன் தாத்தா என்ன செய்கிறார், என்று கவனித்தபடி அரவிந்தனுக்கு ஒரு கணக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். சோமு நேரம் மறந்திருந்து கவனித்தான் சோமு.

"தாத்தா இந்தக் கணக்கு தேர்வுக்குக் கண்டிப்பாய் வரும் என்று என் கணக்கு ஆசிரியர் கூறியுள்ளார். எனக்குத் தெரியாததை எல்லாம் உங்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வருகிறான் என்னால் வகுப்பில் முதல் மாணவனாக வர முடியாது" என்று அரவிந்த். சோமுவின் தாத்தாவிடம் கூறினான்.

அப்படியா, சபாஷ்... தொடர்ந்து நன்கு படிக்கணும் பரீட்சை பேப்பரு எழுதுங்க தாத்தா.

"எனக்கு சொல்லித் தரும் உபகாரத்துக்கு என்னால ஏதாவது செய்ய முடியவில்லை" என்று வருத்தப்பட்டான் அரவிந்தன்

"எனக்கு நீயும் ஒரு பேரன் மாதிரிதான் உன் அப்பா வீடு வேலை செய்து உன்னை படிக்க வைக்கிறார். உன்னால் பணம் கொடுத்து டியூசன் படிக்க முடியாது. நான் அதைக் கணக்குப் பட்டதாகி. என் பேரனாகு சொல்லிக் கொடுத்தா பணமாக வந்தவேன். அதே மாதிரித்தான் உ சங்கும் நீ நலனை படித்தால் அதுவே போதும்" என்று சொல்லிவிட்டு விடைபெற்றார். எல்லாவற்றையும் மறைத்திருந்த சோகம், சோமுவை வெட்கப்படச் செய்தன.

அப்பாவும், அப்பாவும், என் தாத்தா வை ஒப்பிக்கும். உ ஆமாதுவி என்று ஒதுங்கி சுவர்ரிடு தாக்கள். அதனால் தானும் அவரை கண்டுகொள்ள மாயம் ஒதுங்கினேன்.

இந்தக் கணக்கு சொல்லித் தரும் தாத்தா.

"என்ன கணக்கு கேளுங்க. சொல்லி சொல்லித் தரேன்" என்று தாத்தாவும் சந்தோஷமாக கணக்கை சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தார். இப்போது சோமுவுக்கு அவனது தாத்தாவின் அருமை முழுமையாக புரிந்திட்டது.

சூரியசக்தி

சூரிய சக்தியை வியாபாரக் கொண்டே அனைத்து உயிர்களும் இயங்குகின்றன. பூமியில் ஒரு சதுரமீற்றர் அளவு சூரிய ஒளி சுமார் 2 ஆயிரம் கிலோவாட் சக்தி கொண்டது இதை நாம் மின்சக்தியாக மாற்றலாம். தற்போது சூரியசக்தியை மற்றும் தொழில்நுட்பம் வளர்ந்து வருகிறது. உதாரணமாக, ஒரு லிற்றர் பெற்றோலில் 100 குதிரை சக்தி கிடைக்கிறது என்றால், ஒரு கிலோவாட் மணி நேரம் 1.3 குதிரை சக்தியை பெற முடிகிறது. தாவரங்கள் தங்களுக்குத் தேவையான உணவை சூரியஒளியின் மூலம் ஒளிச்சேர்க்கை செய்து உருவாக்குகின்றன.

தகவல் களஞ்சியம்

* மனிதரின் எலும்பில் உள்ள வேதிப் பொருள் டிரைகால்சியம் பாஸ்பேட்.
* பற்களில் உள்ள குவாரங்களை அடைக்கப் பயன்படுவது வெள்ளிரசக் கலவை.
* சராசரியாக ஒரு நாளைக்கு ஒரு மனிதனுக்கு தேவையான கலோரி அளவு 2,600
* ஒரு ஆண்டுக்கு 365 1/4 நாட்கள் என வரையறுக்கவர் போப் 13ஆம் கிரிகோரி.
* ராணி இரண்டாம் எலிசபெத் திருமணத்திற்கு மகாத்மா காந்தி அளித்த பரிசு கதர் சால்வை.
* ஆகஸ்ட் 15- சுதந்திர தினமாக கொண்டாடும் மற்றொரு நாடு தென்கொரியா.
* பொதுமக்கள் பயணம் செய்வதற்காக முதல் முதலில் பேருந்தை அறிமுகப்படுத்திய நாடு இங்கிலாந்து.
* சாலைகளே இல்லாத ஐரோப்பிய நகரம் வெனிஸ்.

சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்

போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கண்டு கற்கும் முறையினை நட்சத்திர குறியீடு வேண்டும்.

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி வரைபடங்களை ஒட்டி அனுப்பவும். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசாக வழங்கப்படும். ஆனால் கடைசி தேதி 10.05.2012

வர்ணம் தீட்டும் போட்டி இல.941

தினமுரசு வாரமலர்

தபெ.இல.1111, சென்னை. தபெ.இல.107, மயிலாப்பூர்.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 939

பரிசுக்குரியவர்: கோ.அனுஷாவினி, இந்துக்கல்லூரி, வாழைச்சேனை.

பரிசுக்குரியோர்:

01. ஆதவன்ஜெரோம் குரூஸ், சாத்தூர், மன்னார்.
02. பதுர்சிகா, முளியவளை, முல்லைத்தீவு.
03. சிவதாஸ், கரவெட்டி.
04. அபிராமி, மல்லாகம், யாழ்ப்பாணம்.
07. கேவிஷகன், ஒட்டுசுட்டான்
08. எஸ்.சிந்துஜா, மூலங்கட்டு, மட்டக்களப்பு.
09. எம்.எஸ்.எம். நிஹாரா, அம்பாறை.
10. துஷித்திகன், மீன்சந்தை, திருகோணமலை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தொடர்கிறது டெங்கு அச்சுறுதல்!

தற்போதைய வைத்தியப்புள்ளிகள் [illegible] முயற்சி [illegible] மரணிப்பவர்களை அச்சுறுத்தும் டெங்கு [illegible] ஒரு பயங்கர உயிர்க் கொல்லி நோய் மீண்டும் நம்மை அச்சுறுத்த துவங்கிவிட்டது. [illegible] 14ஆம் திகதி [illegible] 21ஆம் திகதி [illegible] 2 [illegible] 3 [illegible] [illegible] 2 [illegible] 3 [illegible] [illegible] [illegible]

மூக்கை நுழைக்கும் நாயகன்

கணேஷ் வெங்கட்ராமன், ஷோபா, கல்பனா நடிக்கும் படம் பனித்துளி, நட்டி குமார் இயக்குகிறார். அபியும் நானும், உன்னைப்போல் ஒருவன் போன்ற படங்களில் நடித்த கணேஷ் வெங்கட்ராமன் கதா நாயகனாக அறிமுகமாகிறார். ஷோபா, கல்பனா கதாநாயகி. இதன் படப்பிடிப்பு 70 சதவீதம் அமெரிக்காவில் நடந்துள்ளது. கதாநாயகனாக அறிமுகமாகும் கணேஷ் வெங்கட்ராமன் நடனம், காட்சி, சண்டை என ஒவ்வொரு சீனிலும் எப்படி படமாக்க வேண்டும், எப்படி நடிக்க வேண்டும் என்பதை பற்றி ஆலோசிப்பார். பல நேரங்களில் அதுவொரு தொந்தரவாக அமைந்துவிடும். ஆனால் காட்சி படமான பிறகு அதுவும் நல்லதுக்குதான் என்பது தெரியும்.

நண்பனுடன் இணைகிறார் பியா!

கோ படத்தில் நடிகை பியாவின் நடிப்பு நல்ல வரவேற்பை பெற்றது. இருப்பினும் அவருக்கு தமிழ்ப் படவாய்ப்புகள் வராமல் இருந்த நிலையில் நீண்ட மாதங்களுக்கு பின்பு ஒரு வாய்ப்பு வந்துள்ளது. அதாவது, லீலை படத்துக்கு பிறகு, இயக்குனர் ஆண்ட்ரூ இயக்கும் ரொமான்டிக் த்ரில்லர் படத்தில் பியா நடிக்க இருப்பதாக கூறப்படுகிறது. இதில் லீலை படநாயகன் ஷிவ் பண்டிடுடன் நடிக்க பியாவை ஒப்பந்தம் செய்துள்ளார் இயக்குநர் ஆண்ட்ரூ.

ஷிவ் பண்டிடும் பியாவும் நெருங்கிய நண்பர்கள். இப்படத்தில் நடிகை பியா விரும்பியே தன் நண்பருடன் இணைந்துள்ளார்.

கைகொடுக்கிறது கன்னடம்

ரஜினி, விஜய் என தமிழ் திரையுலகில் முன்னணி கதாநாயகர்களுடன் இணைந்து நடித்தவர் ஸ்ரேயா. சமீபகாலமாக படிப்படியாக அவரது வாய்ப்புகள் குறைய ஆரம்பித்தது. இந்தித் திரையுலகில் முயற்சி செய்து பார்த்தார். அதுவும் பலிக்கவில்லை. தமிழில் கடைசியாக ராஜபாட்டை படத்தில் விக்ரமுடன் ஒரு பாடலுக்கு நடனம் ஆடினார்.

இந்நிலையில் கன்னட படவுலகம் அவருக்கு கைகொடுத்திருக்கிறது. ரூபா அய்யர் இயக்கும் 'சந்திரா' என்ற படத்தில் நடிக்க ஒப்பந்தம் ஆகி இருக்கிறார்.

இதுபற்றி இயக்குனர் ரூபா கூறும் போது, தமிழ், கன்னடத்தில் சந்திரா படம் உருவாகிறது. இதுவொரு பீரியட் படம். ஒரு இளவரசி நிஜ காதல் கதையை மையமாக கொண்டு இக்கதை அமைக்கப்பட்டிருக்கிறது. இதற்காக இந்தியா சுதந்திரம் அடைந்தபிறகு அதற்கு முன்பிருந்த இளவரசிகளின் வாழ்க்கை என்ன ஆனது என்று ஆராய்ச்சி செய்து உருவாக்கினேன் என்றார். தமிழ், கன்னடம் இரு மொழிகளிலும் ஸ்ரேயாவை ரசிகர்களுக்கு தெரியும் என்பதால் அவரை தெரிவு செய்ததாக இயக்குநர் தெரிவித்தார்.

ஆட்டத்தில் ஆடிப்போன பாண்டிச்சேரி

கல்யாணமான கையோடு மீண்டும் கோடம் பாக்கத்தில் திறமை காட்ட வந்துவிட்டார் ரீமாசென். அம்மணி இப்போது முகாம் அடித்திருப்பது பாண்டிச்சேரி எனப்படும் புதுச்சேரியில்! விஜய் தயாரிப்பில் உருவாகும் சட்டம் ஒரு இருட்டறை படத்தில் அவர் நடன நங்கையாக வருகிறார். ஆட்டத்துக்குப் பேர் போன புதுச்சேரி தெருக்களில் இவரது ஆட்டம் படமாக்கப் பட்டது. ரீமாவைப் பார்க்க ஏகக் கூட்டம் கூடிவிட்டதாம். இந்தப் படத்துக்கு கதை, திரைக்கதை, வசனம் எல்லாம் எஸ்.ஏ.சந்திரசேகரன்தான். ஆனால் இயக்குநர் மட்டும் அவரில்லை. ஆம். தன்னிடம் உதவியா-ளராக இருந்த சினேகா என்ற பெண்ணை வைத்து இயக்குகிறார். ஏற்கெனவே ஒரு படத்தை சேன-ாபதி மகன் என்ற பெயரில் எஸ்.ஏ.சந்திரசேகரனே இயக்கியதாகச் சொல்வார்கள்! இந்த புதிய சட்டம் ஒரு இருட்டறையில் விக்ரம் பிரபு நாயகனாக நடிக்கிறார். விஜய் ஆன்டனி இசை அமைக்கிறார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ாகாதசிக்கு ஏகப் பிரியம் இனியா!

தமிழில், 'கொஞ்சம் வெயில் கொஞ்சம் மழை' படத்தை இயக்கியவர் ஏகாதசி.

தற்போது நாயகன் விதார்த் நடிப்பில் கனவு என்ற புதிய படத்தை இயக்கவுள்ளார்.

ஆனால் இன்னும் நாயகி மற்றும் நடிகர்கள், நடிகைகளுக்கான தெரிவுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இயக்குநர் ஏகாதசி கூறுகையில், காதலை மையமாக வைத்தே திரைப்படங்களை இயக்க திட்டமிட்டு வருகின்றேன். கனவு படம் சாதிப் பிரச்சினையை எதிர்த்து உருவாகவுள்ளது. இப்படத்திலும் காதல் கண்டிப்பாக வரும் என்றார். தங்களுக்கு பிடித்த நாயகி யார் என்று கேட்டதற்கு, இனியா என்று கூறினார். ஏனென்றால் இனியாவுடைய கிராமத்து முகம் தனக்கு பிடிக்கும் என்றும் சூழ்நிலை அமைந்தால் அவரை வைத்து படம் இயக்குவேன் எனவும் தெரிவித்தார்.

ஸ்ரீதர்

வெளிவந்துவிட்டது கலக்கலான கலகலப்பு

ரு கல் ஒரு கண்ணாடி' படத்திற்கு கிடைத்த வரவேற்பை த்து சந்தானம் நடித்து இருக்கும் படம், நீண்ட காலம் த்து சுந்தர்.சி இயக்கத்தில் வெளிவரும் படம் என இரட்டை ரபார்ப்புடன் திரைக்கு வருகிறது கலகலப்பு.

ந்தர்.சி படம் என்றாலே காமெடி காட்சிகளுக்கு பஞ்சம் க்காது. சுந்தர்.சி இயக்கத்தில் வடிவேலு நடித்த படங்களில் ள காமெடி காட்சிகள் இப்போதும் பிரபலம்.

கலகலப்பு' படத்தில் சுந்தர்.சி உடன் முதன் முறையாக ணைந்து இருக்கிறார் சந்தானம். நகைச்சுவை நாயகர்களாக விமல், மிர்ச்சி சிவா, கிளாமரான கதாபாத்திரங்களில் அஞ்சலி, ஓவியா, இவர்களுடன் இணைந்து சந்தானத்தின் காமெடி இருப்பதால், இப்படத்திற்கு பெரும் எதிர்ப்பார்ப்பு நிலவி வருகிறது.

இப்படத்தினை திரையுலகின் முன்னணி இயக்குனர்களுக்கு திரையிட்டு காட்டியிருக்கிறார்கள். அனைவருமே இப்படத்தினை பாராட்டியதாக தெரிவித்து இருக்கிறது யு.டிவி நிறுவனம். "ஜாலியாக வாங்க, ஜாலியாக போங்க" என்ற கலகலப்பாக விளம்பரத்துடன் படம் திரைக்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பலரும் மிரள துணிந்தார் நயன்!

நடிகை சில்க் ஸ்மிதாவின் வாழ்க்கையைப் பற்றியது 'தி டர்ட்டி பிக்சர்ஸ்' வெளியான சில திகதிகளில் வசூலில் சாதனை படைத்தாலும் ஒரு சில பிரச்சினைகளும் அணுகியது. வந்த பிரச்சினைகளையெல்லாம் உடைத்தெறிந்து 'தி டர்ட்டி பிக்சர்ஸ்' தேசிய விருது பெற்றது.

இப்படத்தை தெலுங்கு, கன்னடம், மலையாள மொழிகளில் தயாரிக்க போட்டிகள் நிலவி வருகிறது. இதில் தெலுங்கில் நடிக்க ரிச்சா, அனுஷ்கா, நிகிதா ஆகியோரை படக்குழுவினர் அணுகினார்கள். ஆனால் மிரண்டு ஓடினார்கள். இதையடுத்து தற்போது நயன்தாராவை படக்குழுவினர் அணுகியுள்ளனர். இதற்கான ஒப்பந்தத்தில் அவர் கையெழுத்திடுவார் எனவும் படக்குழுவினர் நம்பிக்கை கொண்டுள்ளனர். இப்படத்தில் கவர்ச்சியாக நடிக்க நயன்தாரா சம்பளத்தை உயர்த்தி கேட்டுள்ளதாகவும் அதற்கு படக்குழுவினர் ஒப்புக் கொண்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

எதிர்பார்க்கப்படுகிறது நெல்லை சந்திப்பு

ருபம்

இன்றி சர்வ சாதாரணமாகிப்போன போலி என்கவுண்டர்களை சுற்றி பின்னப்பட்ட கதை இது. தன் இரத்தம் பார்த்தே மயங்கி விழும் ஒரு கல்லூரி மாணவர், 3 கொடூர கொலைகளை செய்கிறார். அது ஏன், எதற்கு? என்பதே படத்தின் ஒரு வரிக்கதை. நெல்லை அருகே நடந்த ஒரு உண்மை சம்பவத்தை அடிப்படையாக கொண்டு திரைக்கதை அமைக்கப்பட்டு இருக்கிறது. இன்றைய காலகட்டத்தில், தொலைந்துபோன குடும்ப சூழலை ர்டும் உணர வைக்கும் படமாக இருக்கும். படத்தின் பெயர், நெல்லை சந்திப்பு. இயக்குகிறார் பி.பி.நவீன். இவர் டைரக்டர் கே.எஸ்.ரவிகுமாரிடம் வி டைரக்டராக இருந்தவர். பட அதிபர் பி.எல். னப்பன், டைரக்டர் சரவண சுப்பையா ஆகிய வரும் வில்லன்களாக அறிமுகமாகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேன் கிண்ணம்

காதல் ஒரு காவியம்!

முதல் காதல் அனுபவம் என்பது நிச்சயமாக வித்தியாசமான அனுபவம். தான் தமது உணர்வுகளுக்கு உருவம் கொடுத்து வாலிபத்தின் பருவமாற்றங்களுக்குள் அகப்பட்டு திரும்பும் ஒரு பதின்ம அனுபவம் இதனூடே நினைவலைகள் தடுமாறுகின்றன.

காதலில் விழுந்த இவர்களால் தொடர்ந்து இயல்பான அழகான கனவுகளில் முழுமூழ் ஆழ்ந்திருக்க முடியாது. காதலின் வலிகளை வலிந்து ஏற்றுக் கொள்ள நேர்கிறது. ஆனால் அவர்கள் நினைவுகளை தவிர்க்கவோ, மறக்கவோ முடிவதில்லை.

இரு நெஞ்சங்களில் துளிர்விடுகின்ற காதலின் ஏன் இப்படி சாதியின் முன் தூசாகிறது? மாறுபட்ட நிறம் தடையாகிறதா, விஷயமாகிறதா? மாறுவது எதை? நம்பிக்கையான காதலின் நிறம் என்ன? வேறுபடும் தருணங்களில் உருவம் எங்கே? என்று எண்ணங்களை எழுகின்றன.

காதல் என்பதே ஒரு வகையில் திட்டமிடுதலாகி "எனக்கு எப்படியான பொருத்தமுடைய ஒருவன் கணவனாக வர போகிறான் என்பதை ஏளவுக்குப் புரிந்து கொள்கிறது. எனக்காக இவனை செய்தது நீயே, என்னில் இவனை அங்கீகரிக்கச் செய்தது நீயே, அந்த முறையாக இவர்தான் நல்லவரானால்" என்று மனம் போடும் கணக்கு, காதலின் முக்கிய வரி.

இரு அனுபவங்களும் பொருந்தும். கல்லூரி மாணவ மனங்களிலே ஒரு வேர் ஊன்றி விடுகிறது. காதல் இளைஞர்களி அடிமனதில் சிலவேளை திரைமறைவு போல்விட, காதலை ஆக்கபூர்வமான ஒரு சக்தியாக பயன்படுத்தி வாழ்க்கையில் வெற்றி பெற்ற காதலர்களாக இருக்கின்றார்கள். காதலில் வெற்றி கொண்ட மனமுக்த காதல் என்பது உண்மையான அன்பாகத்தான் தெரியும். அதேநேரம் தோல்வி அடைந்தவர்களுக்கு அது நரகமாகவே மனதில் விழுந்து விடப்பட்ட அசை மாறாமல்தான் இருக்காது?! அந்த ஒரு வகை ஆசையில் காதலிக்கத் தொடங்கி அதனை அடைத்தாக தெரியும் போது என்ன தான் செய்ய முடியும்?..... உண்மை என்றாலே பொய்தானா?? இந்த வாழ்க்கை தேவைதானா?! காதல் என்பது வேதனையானதா?? என்று பல கேள்விகள் மட்டும் மனதில் எழுவதை தவிர்க்க முடியாது. காதலிக்கிறவர்களில் சிலர் வாழ்க்கையில் ஏற்படும் சறுக்கல்களுக்கு காரணம் தேடி தோல்வியை ஏற்றுக் கொள்ளாமல் இது உண்மையான அன்பு தானா?.. அல்லது [illegible] போன்ற [illegible] மனமா? என்ற சந்தேகமும் எல்லாம் உருவாகிறது. இருவேறு உள்ளங்கள் ஒன்றாகி விடுவது என்பது காலமுடியாத ஒன்றாக காணப்படுகிறது. அந்தவகையில் பார்க்கிற போது நிச்சயமாக உண்மைக் காதலாக இருந்து அதில் வெற்றி பெற்றவர்கள் மனமும் ஒரு கணம் பார்க்க வேண்டும். உண்மைக் காதலாக இருந்து தோல்வியை அடைந்த வர்களுடைய நினைவை உணர்த்துவதற்கு வார்த்தைகள் கூட வேதனை தாங்காது எனலாம். இத்தனையும் தாண்டி நாம் இவர்களை வேறுபடுத்தி பொதுவாக முடிவுகளை தரவிடாமல் மனிதர் உணர்வுகளை மதிக்கத்தெரியாத ஒருவன் தன் நிச்சயமாக காதலை அடைவிடம் சொல்லாமல் அவளுடைய வீட்டில் சொல்லி நடுக்கங்களாக வருமுன்னால் நடிக்கைக் கூடிய முறையாக ஒரு சொல்கிறது.

உண்மையான எண்ணங்களை சமர்த்தும் இதயங்களுக்கு ஒரு ஏமாற்றம். சொல்கிறது எல்லாவற்றுக்கு நாள் நாள் சற்று சொன்னாலும் இறுதியான ஒரே வழி காதலை விளையாட்டாக எண்ணுபவர்கள் அதனை புரிந்துகொண்டு அதனை மதித்து செயற்படுவதுதான்.

இத்தகைய சூழலில் வாழ்கின்ற காதலர்கள் உண்மை பொய்களை அறிந்து செயற்படவேண்டிய தேவை இருக்கிறது. முதல் பிடிக்கிற நாளை முதலில் தெரியும் எல்லாவிதமான எதிர்பார்ப்புகளுடனே எதிர்கொண்டு நீங்கள் முகத்தை வைத்து உண்மையை அறிந்து முடியாது. தான் சொல்லவருவது எல்லாவற்றையும் பார்த்தால் மாயம் என்று சொல்லாமல் சந்தர்ப்பங்களை உருவாக்கி விடும். கனவுகள் பாழ்படும் பொய், காதல் சேதமும் பொய் என்பது காதலுக்கு பொய் சொல்லாதீர்கள்.

எல்லோ இடம்ற அளவு நீங்கள் முயன்று அதிக ஒருவரை காதலிக்க முயற்சி செய்யுங்கள். அந்த உங்கள் நம்பிக்கைத்தன்மை உயர்வாக காணப்படும். அதிக்கதாக நீங்கள் தெரிவுசெய்தவரும் வெளிப்படையாக பழகுங்கள். அது இருவருக்கும் இடையில் நிச்சயமாக ஒரு உயர்ந்த உண்மையான அன்பாகத்தான் தெரியும். அதேநேரம் தோல்வி அடைந்தவர்களுக்கு அது நரகமாகவே மனதில் விழுந்து விடப்பட்ட அசை மாறாமல்தான் இருக்காது?! அந்த ஒரு வகை ஆசையில் காதலிக்கத் தொடங்கி அதனை அடைத்தாக தெரியும் போது என்ன தான் செய்ய முடியும்?..... உண்மை என்றாலே பொய்தானா?? இந்த வாழ்க்கை தேவைதானா?! காதல் என்பது வேதனையானதா?? என்று பல கேள்விகள் மட்டும் மனதில் எழுவதை தவிர்க்க முடியாது. காதலிக்கிறவர்களில் சிலர் வாழ்க்கையில் ஏற்படும் சறுக்கல்களுக்கு காரணம் தேடி தோல்வியை ஏற்றுக் கொள்ளாமல் இது உண்மையான அன்பு தானா?.. அல்லது [illegible] போன்ற [illegible] மனமா? என்ற சந்தேகமும் எல்லாம் உருவாகிறது. இருவேறு உள்ளங்கள் ஒன்றாகி விடுவது என்பது காலமுடியாத ஒன்றாக காணப்படுகிறது. அந்தவகையில் பார்க்கிற போது நிச்சயமாக உண்மைக் காதலாக இருந்து அதில் வெற்றி பெற்றவர்களை மனமும் ஒரு கணம் பார்க்க வேண்டும். உண்மைக் காதலாக இருந்து தோல்வியை அடைந்த வர்களுடைய நினைவை உணர்த்துவதற்கு

பரிந்துரைக்கவைத் தரும். அப்பாது படலம் செய்யும்போது அது வெற்றியான பயணமாகவே அமையும்.

தெரிந்த முறையை தெரிவு செய்யுங்கள் என்றுதான் சிலர் நினைக்கலாம். காதல் இரு இரு மேல்தான் ஏற்படவேண்டும் என்ற எண்ணம் வருவதில்லையே என்று உங்களுக்கு. ஆனால் உண்மை நிறுத்த நெஞ்சங்கள் மற்றவரிடம் காதலும் நாம் வாழ முடியாமல் எதிர்பார்ப்பு வைத்து படகைப்போல் மாறாது வாழ இது கொஞ்சம் சிரமமாக இருக்கும். இதன் மூலம் முன்னுக்கு நாம் காதலில் வெற்றி கொள்ளலாம்.

இங்கே காதலர்களுக்கு இடையில் ஏற்படும் குழப்பங்கள் தான்கள் என்கின்றோமாக சொல்ல முற்படு சொல்லாமலும் ஒரு முகமாகி வரும் பொய் சொல்லுகளுடன் அனுமதி ஏற்கப் என்பதே வித்தியாசமானது. அது தனது காதல் வெற்றியை நிரூபிக்கொண்டு இருக்கும் கூட ஒரு சிறந்த காதலுக்கான அடித்தளம் உள்ளது என்பதை காதலிக்கப்படுபவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அப்பாது ஒரு தலைக்காதல் வெற்றி அடைகின்ற போது அங்கு சுவாரசிய நினைவுகள் நிலைமாற்ற சுகமாகக் தெரியும் தோல்விகளிலும் வாழ்வின் வெற்றியை எம்மால் ஆனால் உண்மைக் காதலை பொறுத்து மனதில் தேவை என்பது காதல் காவியமாகும்.

வாழ்க்கைப் பிடிமானம்

சாதித்துவிட்ட மகிழ்ச்சியில்
இயற்கை தாண்டவமாட
வான வேடிக்கை காட்டத்
தொடங்கிவிட்டது
அந்த நிலவுக்கு
இன்னமும்
கலைந்துவிடவில்லையாம் மயக்கம்
மத்தியானத்து மேகங்களிலிருந்து
தினம் தினம் எட்டிப் பார்த்து வரும்
தன்னில் தேங்கிக்
தேய்ந்து போனதும் அது
வெளிச்சம் வெளியே முடியாமல்

இது என்ன சாதனையும்
இயற்கை இது என்று
மகிழ்ச்சியில் குதூகலிக்கும்
மனங்கள் ஒரு புறம்
அதற்கு மேலும்
மலையாக மாறி நிற்கும்
ஓய்மாரி மனக்கிடக்கை மறுபுறம்
இது புலரபோடிய தன்னாக்கம்
எப்படி வந்து சேர்ந்தது

இப்படி வரையறைகளுள்
மறுகுலிக்கத் தெரியாமல்
வளர்ந்து விட்டபோதும்
தினமும் அக்கிரமிப்புக்கள்
துறை எல்லாம் புகுந்து
தொல்லை கொடுத்த போதும்
அழுத்தி நிற்கும்
அத்தனை பிடிமானங்களும்
அத்திபாரமானது இந்த
பயண வாழ்க்கைக்கு.

எம்.ஜ.எம்.சிஷ்ரப்,
சாய்ந்தமருது -07.

சுதந்திரமாய் வாழவிடு

நான் நானாக வாழ நீயோ
நான் இப்படித்தான்
வாழ வேண்டும் என்கிறாய்
என் பாட்டில் நான் வாழ
நான் சொல்வதைக் கேளென
நீ சொன்னால் விட்டுக்கிறாய்

என் சுதந்திரத்தைப் பறித்து
சுருட்டில் வாழும் துன்பவத்தை
வெளிக்கொணர்கிறாய்
நான் எனக்கான தேடல்களுடன்
நானாகத்தானே வாழ முடியும்
நான் எனக்கான தேடல்களுடன்
நானாகத்தானே வாழ முடியும்
நான் நீயில்லை நீ நானில்லை
என்பதை நீ புரிய வேண்டும்.

நான் உன்னைப் போல்
துருதுருவாய் உடை உடுத்தவோ
துப்பரவாய்க்கொள்ளவும் துணியவோ
துணியும் உன்னைப் போலவே
எல்லாவற்றிலும்
ஒத்துப்போக முடியாது.

ஆதோ,
யாழ்ப்பாணம்.

நானும் நீயும்
எதிரும் புதிருமானவர்கள்
வடதுருவம் தென்துருவம் ஒன்று.
பிறிதொரு வகுத்த
வடகிழக்கும் ஒன்று
வானத்தில் மின்னும்
ஆறு சந்திரர்களும் இல்லை.
நானும் நீயும்
தனித்துவமானவர்கள்
நான் நானாகவும்
நீ நீயாகவும் வாழவே
இறைவன் எனைப் படைத்தான்
நாம் நாமாக வாழும்போதே
நமக்குள் புரிந்துணர்வு ஏற்படும்
என்னை நீ
தொடர்ந்து தொல்லையில்
என்னுள் இருக்கும்
சிந்தனை சிறியதாயும்.

நான் நானாகவும்
நீ நீயாகவும்
வாழப்பழகிக் கொள்வோம்
ஒப்போடுதான் நாம்
நாமாக வாழ முடியும்
நமக்கான சுதந்திரத்துடன்.

என் கனா

நிலாக்காலம்.
வான்வெளி இருளாடை கட்டி
இழுத்துப் போர்த்து தூங்கும் நேரம்
மேகத்தை அள்ளியபடி
அவசரமாய் விரையும் காற்று
என் விழிகள் மட்டும் தூக்கத்தை
மாந்து நெடுநாட்களாகிவிட்டபடி.
தலையணை சுமை தாங்காமல்
கனவுகள் கண்ணுடியே காண வேண்டும்
நான் மட்டும் (தனியே) கண்களே
இல்லாமல் இருளில்.

வாசகி.
யாழ்ப்பாணம்.

மாயா ஜாலம்?

அவனுள் நீ! உள்ளுள் அவனாய்
ஆதமுள். முன்னர் ஒரு நாள்
கண்ணுருள் மணியாய் எண்ணிக்
கொண்டு தோர் இனிய நாளும்.
விழிமொழி வழியில் நீவிர்-
விடைகளைப் பரிந்த நாளும்.
இல்லறப் பிணைப்பிலாகி
இணை. துணையான நாளும்.
மடி நவும் செல்வப்பேறில்
மனமிசை கண்டநாளும்.
வியலின் வெளிச்சங்காண
விம்மலில் பிரிந்த நாளும்.
கடல். தரை கடந்த நாளும்.
கனவுகள் கலைந்த நாளும்.
உடல்களின் பிரிவின்போதும்
உயிரொரு மித்தநாளும்.
கொண்டவை மீண்ட நாளும்.
நன்றவை கண்ட நாளும்.
உறவுகள் உயிர்க்க நாளும்.
உணர்வுகள் வியர்க்க நாளும்,
வியர்த்தலில் விரிந்த நாளும்.
வியந்ததால் விரிந்த நாளும்.
விரிகையில் பிரிந்த நாளும்
பிரிப்பினால் தவித்த நாளும்.
தரிப்பினில் தவிக்கும் நாளும்...
நாட்களாய். வாரம். மாதம்
நகர்தலால் ஆண்டாய். மீண்டும்
ஆண்டுகளாகும் கோலம்!
ஆவதோர் மாயாஜாலம்!
ஆவதில் உணர்வின் ஓலம்!

ஏறாவூர் தாஹிர்.

தொப்புள் கொடி உறவு

தொப்புள் கொடி உறவுகளை
சுற்றுலாவாய் பாரினில் சுழல்கிறது!
சொந்தமான தாய் –பின்னவளாய்
தாய் அன்புக்கும் உண்டே.
அடைக்கலம்!
தன் பசி மறந்து எம் பசி
போக்கி இரக்கத்தைப்
பாலாக்கி எம் உயிரை
நிச்சயமென நினைப்பாள்
தாய்க்கலத்தை உணர்வுகளால்
வணங்க வேண்டும் நாளெல்லோரும்...!

மாத்தா-யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணதாசனின்

அவள் ஒரு இந்துப் பெண்

14

அளவுக்கு மிஞ்சினால் தொழில்நுட்பமும் நஞ்சுதான்

காராளமயமாக்கலின் விளைவாக வளரும் நாடுகளின் இளைஞர்களில் பெருமளவானோர், பன்னாட்டு நிறுவனங்களின் தொலைபேசி இயக்குநர்களாக மாறிக் கொண்டிருக்கின்றனர். மூலை முடுக்கெல்லாம் உலகத்துடன் எப்போதும் தொடர்பு கொள்ளும் வசதி எல்லோருக்கும் கிடைத்திருக்கிறது. எழுதப்படிக்கவே தெரியாதவர்களுக்குக்கூட செலவோனில் குறுஞ்செய்திகளைப் படிக்க முடிகிறது. இவையெல்லாவற்றையும்தான் நாம் நவீன தொழில்நுட்ப முன்னேற்றம் என்று கருதுகிறோம்.

ஆனால், இந்தப் முன்னேற்றம் மனிதனை இன்னும் ஆக்கபூர்வமாக மாற்றியிருக்கிறதா என்றால், இல்லவே இல்லை என்கிறார்கள் நிபுணர்கள். இந்தக் காலத்து இளைஞர்கள் புலக்கப்பிடிப்பதையும், மற்ற அனைத்தையும் வேண்டாமல் விட்டுவிடுகிறார்கள். ஆனால், பொழுதுபோக்கும் தொழிலாகிவிட்ட விடமாட்டார்கள் என்று சொல்கிறது ஒரு ஆய்வு. "கணவன் - மனைவி உறவு, குழந்தைகள், தாக்கம் போன்றவைகளை சமூக வலைத்தளங்களுக்குப் பிறகுதான்" என்ற நிலை வரையறை மாறி இளைஞர்கள் சென்று கொண்டிருக்கிறார்களாம். இப்போது நாம் [illegible] செல்போன்கள் வெறும் பேசுவதற்கு மட்டுமே பயன்படக் கூடியவையல்ல. ஜிமெயிலும், பேஸ்புக்கும் கைக்குள் அடக்கமாக இருக்கின்றன. உலகத்தில் என்ன நடந்தாலும், அந்நிமிடமே நமக்கு தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றன.

உலகத்தில் பெரும்பாலானோர் போக்கு, சமூக வலைத்தளங்கள் சுழற்றும் அடிமைகளாகிவிட்டனர் என்று கூறுவது பழங்கதை. அவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு புரட்சி செய்கிறார்கள் என்பதுதான் புதிய பரிணாம வளர்ச்சி. பேஸ்புக்கில் கவர்ச்சியான ஏதோ உண்மையான செய்தியும் போலக் கருதி, 'இது எனக்கான கவர், அது அவனுடைய கவர்' என உரிமை கொண்டாடுவதைக் கேட்க முடிகிறது. மார்க் ஸக்கர்பெர்க் நினைத்தால் எல்லாச் கவர்களையும் ஒரே நாளில் தரைமட்டமாக்கிவிட முடியும் என்பதைக்கூட இந்த அன்பர்கள் புரிந்து கொள்வதில்லை.

சிலருக்கு மின்னஞ்சல் வந்திருக்கிறதா என்று எப்போதும் பார்த்துக் கொண்டே இருக்காவிட்டால், பிற வேலைகளைக் கவனிக்க முடியாது. உருப்படியாக எந்த மின்னஞ்சலும் வராது என்று தெரிந்தாலும்கூட ஒரு வேற்று எதிர்பார்ப்பில் மின்னஞ்சல் பெட்டியைத் திறந்து வைத்திருப்பது இவர்களது பழக்கமாக மாறியிருக்கிறது.

இந்தப் பழக்கங்கள் மிக மோசமானவை என்றோ, பிறருக்குத் தீங்கிழைப்பவை என்றோ கூறவரவில்லை. சம்பந்தப்பட்டவரின் செயல்பாடுகளே பிரச்சினையாக இருக்கிறது என்பதுதான் இன்றைய நிபுணர்கள் விடுக்கும் எச்சரிக்கை. மனஅழுத்தங்களும் அரட்டைப்பெட்டிகளும் இணைவதில் உலகம் நேரத்தில் பெரும்பகுதியைத் தின்றுவிடுகின்றன. அதனால், என்ன நோக்கத்துக்காக இணையத்தில் நுழைந்தோமோ அதில் ஈடுபடாமல் மனித சிறுதனமும் பெரிதும் திரிந்துவிடுகின்றன. இதுதான் முதலாவது பிரச்சினை.

போனையும் லேப்டாப்பையும் பக்கங்களாக கொண்டு செல்வது. சம்பிரதாய நேரத்தான் ஒரு நேரம் எனக் கருதி அந்த நேரத்தில் தொலைபேசி அழைப்புகளைச் செய்வது என நம்மை அறியாமலேயே பல கெடுதலான பழக்கங்களுக்கு ஆளாகிறோம்.

இதற்கு என்னதான் தீர்வு? தொழில்நுட்ப வளர்ச்சியோடு, அறிவியலாகலின் பிற விளைவுகளையோ தடுக்க முடியுமா என்ற கேட்டால், நிச்சயமாக முடியாது என்பதுதான் பதில். ஆனால் மோசமான விளைவுகளில் இருந்து நம்மைத் தற்காத்துக் கொள்ள முடியும். போன்கள், லப் டாப், கணினி உள்ளிட்ட அனைத்துமே வெறும் ஜடப் பொருள்களிதான். பேஸ்புக், ட்விட்டர், அரட்டை பெட்டிகள் போன்றவையும் மனிதனால் உருவாக்கப்பட்டவைதான்.

நமக்கு எது அவசியம் எது கூடாது என்பதை நாம் தெரிந்து கொண்டால் போதும். தொழில்நுட்ப வளர்ச்சியைக் கண்டு அச்சப்பட்டு ஒதுங்கி நிற்கவேண்டிய அவசியம் இல்லை. செல்போன், பேஸ்புக், ட்விட்டர் நம் வாழ்வோடு பிணைந்து விட்டன. இவற்றை முழுமையாக ஒதுக்கி விட்டு வாழ்வது சாத்தியமல்ல. ஆனால், அவை நம் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். நேரம், சக்தி மற்றும் பிறரை மனதைத் தடுக்க வேண்டும். இல்லையென்றால், குடும்பம், நண்பர்கள், சமூகம் என ஒட்டு மொத்தமாக இருக்கும் உன்னதமான வாழ்க்கையை இழக்க நேரிடும்.

ரவிச்சந்திரன் வந்த பிறகாடு அன்று இரவு மறுநாளைது இரவு அவனுக்குப் பயமும் கலவையும் மிகுந்த இரவு ஜீதேவிக்கோ தூங்காத இரவு.

வழக்கம்போல் இருவருக்குமான உணவைத் தோழிப் பெண்கள் ரவியின் அறையிலேயே கொண்டு வந்து வைத்தார்கள். அவர்கள் சென்றதும், வழக்கம்போல் தன்னை அழகுபடுத்திக்கொண்டு, மெதுவாக வந்து கதவோரம் நின்றாள் ஜீதேவி.

ஒவ்வொரு நாளும் அவள் வந்து நிற்பது அவனுக்குப் பயமாகவே இருந்தது. 'எங்கே தன் விரதம் கலைந்துவிடுமோ?' என்று அவன் அஞ்சினான்.

அவள் மெதுவாக, பயப்படாதீர்கள். நீங்கள் குறிப்பிட்ட காலம் வரை உங்கள் விரதத்தை நான் கலைக்கமாட்டேன். எனக்குத் தூக்கம் வரவில்லை. நான் கொஞ்சம் இராமாயணம் படிக்கட்டுமா?' என்றாள்.

"இராமாயணம்! அதை நான் படித்திருக்கிறேன்!" என்றான் ரவி.

"யார்தான் படிக்கவில்லை? தூக்கம் வராமலிருக்க வைகுண்ட ஏகாதசியன்றும் சிவராத்திரியன்றும் பெண்கள் இராமாயணம் படிப்பது வழக்கம். நானோ தூக்கம் வரவில்லை என்பதற்காக இராமாயணம் படிக்க விரும்புகிறேன்" என்றாள் ஜீதேவி.

"சரி! புத்தகம் எங்கே?" என்று கடுமாறினான் ரவி.

"புத்தகம் எதற்கு? இந்துப் பெண்ணிடம் ஆண்டாள் பாசுரம் படித்து எனக்கு அது பாடமாகவே ஆகிவிட்டது. படித்ததை ஒப்புவிக்கிறேன். கேளுங்கள்" என்று ஆரம்பித்தாள் ஜீதேவி.

"ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியைப் பிரிந்து இலங்கை அசோகவனத்தில் சீதா இருந்தாள். கட்டுமானான அரக்கிகளை அவளைக் தகங்கிக்கொள்ள முயற்சித்து தலைகுனிந்தபடியே ஸ்ரீராமன் பக்கத்திலிருந்தும் அவளைப் பிரிந்திருக்கும்படியாகவே நேர்ந்தது. ஸ்ரீராமச்சந்திர போதும் அகலாசக்தி அவள் வெறுத்தாளே ஆதலின் எப்போதும் அவள் தனியாகவே இருந்தாள். இப்போதும் தனியாகவே இருக்கிறாள்.

"அசோக மரங்களிலிருந்து பூக்கள் பட்டு வெயிலுக்கு சரிந்து கிடந்த அவளது கூந்தலைத் தூசியிலிருந்து தவிர்ந்து வந்த மின்னல்களின் பனித்துளிகள் அவள் இதழ்களைக் குளிர் வைப்பதற்குப் பதிலாகக் காயவைத்தன. தன்னை அவர் கரித்துக்கொள்ள அவள் விரும்பவில்லை. யார் அந்த அழகைக் காண வேண்டுமோ, அவர்கள் காணாமல் இருக்கும்போது பிறர்பார்த்து என்ன பயன்?

"சீதையின் உணர்வு என்பது வெறும் காம உணர்வல்ல. அது அந்தராத்மா உடலுக்குச் சொல்லிய செய்தி. புனிதமான தாம்பத்திய உறவின் மூலம் ஆன்மாக்கள் இறுக்கமடைகின்றன' என்பதை வேதவதி நன்றாக அறிவாள். அரக்கர் குலத்துப் பெண்கள் கூட அவளுக்காக இரங்கினார்கள். ஆனால் அவளது புருஷன் ஸ்ரீராமனோ காலத்தை எதிர்பார்க்காதவனாகக் காணப்பட்டான்.

"கோடையில் குளிர்ச்சியாகவும், குளிர் காலத்தில் வெப்பமாகவும் மாறுகின்ற குலங்கள் சீதா, இலங்கை வானத்தின் பருவங்களையே மாற்றிக் கொண்டிருந்தாள்.

"இளவேனிற் காலம் வந்தது. எண்ணிலடங்காத இலைகள் அவள் மீது உதிர்ந்தன. அவை உதிர்வதையோ மீண்டும் துளிர்ப்பதையோ அறிந்தவளாக அவள் இல்லை.

"ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியின் நினைவில் தியான யோகத்தில் மூழ்கியவளாகவே அவள் இருந்தாள்...

"அவள் கண்களுக்கு மேலே இமைகளும் இருந்ததை அவள் மறந்துபோய்விட்டாள். உயிருக்குப் பயந்து வடுத்தாள். பயிற்றுக்குப் பசி வடுத்ததையும் அவள் அறியாமலிருந்தாள்.

"இந்திரன்று மாலையன் பொலிவு மங்கி இலங்கை வானத்தை முற்றுகை யிட்டன. கார்காலம் வந்துவிட்டது.

"அந்தக் காலத்தில் மழைநீரினால் அதிகமாக இருப்பவனாயும் நீதி உணர்வில்லை. அவளது கவனிக்கத் துளிகளைவிட அவை அதிகம் இல்லையே!

"மெய்ஞ்ஞான பறவைகள் அசோக மரங்களுக்குள் புகுந்து சிறகடிப்பது போல் அவளது இமைகள் அடித்துக் கொண்டபோதுதான், 'இலங்கைக்கு வந்தது முதல் நான் தூங்கவில்லை' என்பதை அவள் உணர்ந்தாள்.

"ஒரு குலதர்ம பத்தினி இந்த விரதங்களுக்கெல்லாம் தயாராக இருக்க வேண்டியவளே. அவளே கன்னிப் பெண்ணாக இருந்து, அரசு வளத்தில் இருந்து பிரிவுக்கு ஆளாகும் அவளது துன்பம் ஒன்றாகவே இருந்திருக்கும்.

ஆனால், தாயகன் என்று ஒருவன் இருந்து அவளைப் பிரிந்திருக்கும் சித்திரவதையை அவளன்றி வேறு யார் உணர முடியும்?"

இப்படி ஜீதேவி ஒப்புவித்துக் கொண்டிருக்கும் போது, தன்னுடைய அறையில் தோழிப் பெண்களிடம் ஸ்ராணி பேசிக்கொண்டிருந்தாள்.

"என்னால் முடியாது. ஒரு மனைவியின் துயரம் என்னவென்பதை நான் அறிவேன். கணவனின் துயரம் இல்லையே என்று, விதவையின் துயரம் போய்விட்டதே என்பது. ஆனால் ஒரு மங்கல மாலையின் துயரம் 'இருந்தும் இல்லையே' என்பது என் மனதை ரணமாகி கொத்தில் வாடுகிறது. பொலவே மாலைகளும் வாடி வருந்துகின்றன. பிரிவிருக்கிறது. ராவணனல்லவா, ஆனால் என் மருமகள் எப்படியாவது இயமனைத் துரத்தி அவளை வாழ்த்து கொண்டிருக்கிறாள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று புதிதாகப் பிறப்போம்?

பயம் அவருக்குத் தான்

ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறுக்கொண்டிருக்கும் இவ்வேளையில் கடந்த நாட்டு மீற்ர் குறுந்தூர வெற்றிவீரன் பாராக்கிறுக்கும் என்ற ஓர் எதிர்பார்ப்பை இருந்த வேளையில் அந்த எதிர்பார்க்கப்பட்ட வீர்கள் ஏமாற்றம் ஒன்றை நிகழ்த்தியுள்ளார்.

அதாவது தற்போது 100 மீற்ர் குறுந்தூர உலக சாதனை நிகழ்த்தி, கொண்டிருக்கும் உசைன் போல்ட் அவர்கள் தனியே முறியடித்துள்ளார். அதாவது 9.81 செக்கன்களில் முடித்துள்ளார். இந்த நிகழ்வு ஜமைக்காவில் நடைபெற்ற ஒலிம்பிக்கான ஏற்கனவே ஒதுக்கப்பட்டிருந்த தடகள போட்டிகளில் நடைபெற்றது.

இதில் இன்னொரு விசேஷம் என்னவென்றால் சில வாரங்களுக்கு முன் கேரோ ... தடகள போட்டியான பொதுச் போல்ட் இந்த 100 மீற்ர போட்டியை 9.91 செக்கன்களில் முடித்தார். அதனையும் முடியாதிருந்தவர் போல்ட்.

◆ யா! வோல்ட் சாம்பியன்ஷிப் போட்டிகளில் தனது தொடக்கத்தில் 100 மீற்ர ஓட்டத்தில் இருந்து விலக்கப்பட்டவர்

இவர் தனது இரு முறையும் வேறு இளைஞ வீரர்களின் தவறான ஓட்ட ஆரம்பத்தால் ஓட்டம் தடைபட்டே அதனை ... முடிவடையாமல் ... ஆக்கிவிட்டதாக ... இந்த போட்டியின் நடுவர்களுடன் ... வெளிநாடும் இளைஞரும் தீர்வை ... அடைய ... எனக்கு ... ஒலிம்பிக் போட்டியை ... கொண்டார்கள்.

இவர் தனது ... 2163 ... 100 ... 200 ... 4 ... 1988 ... 2012 ... 2012 ... 9 ... 100 ... 200 ... 4 ... 1988

நல்லினக்க ஆணைக்குழு

அறிக்கையின் முக்கிய பகுதிகள்

அத்தியாயம் 9 - பிரதான அவதானிப்புகள் மற்றும் சிபாரிசுகளின் சுருக்கம் இவ்வறிக்கையில் 9 விளக்கப்படுகிறது பிரதான அவதானிப்புகள் மற்றும் சிபாரிசுகளின் சுருக்கத்தை கீழே தருகின்றோம்.

அத்தியாயம் 09

பிரதான அவதானிப்புகள் மற்றும் சிபாரிசுகள்

அதிகாரம்		பந்தி இலக்கங்கள்
அத்தியாயம் 2	யுத்த நிறுத்த உடன்படிக்கை	9.1 – 9.3
அத்தியாயம் 4	சர்வதேச மனிதாபிமான சட்ட விவகாரங்கள்	9.4 – 9.21
அத்தியாயம் 5	மனித உரிமைகள்	9.42 – 9.120
அத்தியாயம் 6	காணாமல் திரும்பிச் செல்லுதல் மற்றும் மீள்குடியேற்றம்	9.121 – 9.152
அத்தியாயம் 7	உரிமையுடையோரிடம் திருப்பிக்கொடுத்தல் - நஷ்டஈடு நிவாரணம்	9.153 – 9.166
அத்தியாயம் 8	நல்லிணக்கப்பாடு	
	யுத்தம் முடிவடைந்த பின்னர் ஏற்படும்	
	நல்லிணக்கப்பாடு தொடர்பான	
	விடயங்களினால் ஏற்படும் தாக்கம்	9.167 – 9.172
	நல்லிணக்கப்பாடு	9.173 – 9.265

அத்தியாயம் இரண்டு : யுத்த நிறுத்த ஒப்பந்தம் பற்றிய அவதானிப்புகள்

9.39 எமக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் மேற்படி விடயங்களை பரிசீலித்து இரு விடயங்கள் குறித்து தனியான விசாரணை மேற்கொள்ளப்பட்டு இரு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த விடயங்கள் குறித்த ஆராய்வுகளும் அதேநிலையில் அமைந்துள்ளன. ஒரு விடயம் [illegible] இந்த விடயங்கள் குறித்த ஆராய்வுகளும் அதேநிலையில் அமைந்துள்ளன. ஒரு விடயம் [illegible] ஆணைக்குழு இந்த விடயங்கள் குறித்த ஆராய்வுகளும் அதேநிலையில் அமைந்துள்ளன. ஒரு விடயம் [illegible] ஆணைக்குழு [illegible]

நிலமெல்லாம் இரத்தம்

02

பா.ராகவன்

மதம், அரசியல் கலந்ததால், மேலும்

[illegible]

எங்கே பாலஸ்தீன்?

அதுதான் கேள்வி. அதுதான் பிரச்சினை. உண்மையில் 'பாலஸ்தீன்' என்பது இன்றுவரையிலும் ஒரு கோரிக்கை மட்டுமே. ஒரு தனிநாட்டுக்கான கோரிக்கை. என்னதான் 1936இலேயே அரபாத், ஒருதிர பாலஸ்தீன் பிரகடனத்தை அறிவித்துவிட்டாலும், 1993 இல் இஸ்ரேலுடனான அமைதி ஒப்பந்தம் கையெழுத்தாகியிருந்தாலும். அமைதிக்கான நோபல் பரிசை இஸ்ரேலிய பிரதமர் யிட்ஸாக் ராபினுடன் (Yitzhak Rabin) அவர் பகிர்ந்து கொண்டிருந்தாலும். 1996 இல் அங்கே ஒரு பொதுத் தேர்தலே நடந்து, அரபாத் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பாலஸ்தீனிய அதிபராக பொறுப்பேற்றுக்கொண்டாலும், ஒரு தனி பாராளுமன்றம் அங்கே செயற்பட்டாலும், பாலஸ்தீன் ஒரு சுதந்திர தேசம் இன்னமும் இன்றுவரையிலும் இல்லை. இல்லாமலிருக்கிறபட்சத்தில் எப்படி அதை இஸ்ரேல் அரசு வீட்டுச் சிறையில் மாதக்கணக்கில் வைத்திருக்க முடியும்? ஒரு சுதந்திர தேசத்தின் அதிபரை, அவரது சொந்த மண்ணில், சொந்த வீட்டில் இன்னொரு தேசம் சிறை வைப்பது எப்படிக் கதைகளில் கூடப் பார்க்க முடியாததல்லவா? திரைப்படங்களில் கூடப் பார்க்க முடியாதல்லவா?

இருபதாம் நூற்றாண்டுள் மிகப் பெரிய சந்திர மோசடி என்றால் அது இஸ்ரேல், பாலஸ்தீனுக்கு இழைத்ததுதான். இதில் சந்தேகமே இல்லை. கற்பனைக்கு அப்பாற்பட்ட தீவிரவாதச் செயல்கள் அங்கே நடந்தன. கொத்துக் கொத்தாகக் கொன்று குவித்தார்கள். இரத்த கட்டடங்கள், சமைந்த சாலைகள், அடைத்த கதவுகளுக்கு அளவே இல்லை. குழந்தைகள், ஆண்கள், பெண்கள் என்று பாகுபாடே கிடையாது. கொல், கொல், கொல் என்னும் சொல் மட்டுமே நாக மந்திரமாக இருந்தது.

அங்கே பொருளாதாரம் உயரவில்லை. போராட்டங்கள் நிகழ்ந்தன. கல்வி வளரவில்லை. கலவரங்கள் நிகழ்ந்தன. அடியில் குண்டு வைத்து விட்டே அமைதி குறித்துப் பேசினார்கள். அரபு மண்ணின் சுவைக் குழந்தையான பாலஸ்தீன் என்று இறுதிவரை ஒரு கனவுக் குழந்தையாகவே இருந்துவிடுமோ என்கிற அச்சம் இன்று உலக நாடுகள் அனைத்துக்கும் எழுந்திருக்கிறது. யசிர் அரபாத் மறைவுக்கு இரங்கல் தெரிவித்த அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ், 'இன் அங்கே அமைதிக்கான வாய்ப்புகள் அதிகரிக்கும்' என்று பேசியதன் உள்ளர்த்தம் புரிந்த அனைவருமே

[illegible] தலைகுனிந்து போனார்கள்.

அரபாத் இல்லாத பாலஸ்தீனியர்களின் வாழ்வில் அமைதி என்பது இன்னமும் எப்படி என்றே விவரமறிந்த மக்களுக்குத் தெரியாது. ஏனென்றால், கடந்த நூறு வருடங்களில் பாலஸ்தீன் கண்ட ஒரே தலைவர் அரபாத் தான். இன்னொரு பெயரை யோசித்துச் சொல்ல முடியுமா பாராளவது? அரபாத்துக்குப் பிறகு இவை கவனம் அதிபராகப் பொறுப்பேற்ற ரௌஹி பட்டோவின் (Rawhi Fattouh) பெயரையோ, பிரதமர் அஹமது குரியின் (Ahmed Qurie) பெயரை [illegible] இதற்கு முன்னால் கேள்விப்பட்டு [illegible] தோமா நாம்? தற்போது, [illegible] பிரதமர் மஹ்மூத் அப்பாஸ்தான் நமக்குப் பரிச்சயமானவரா?

அதுதான் பிரச்சினை. பாலஸ்தீன் ஒரு தலைவனைப் பெறாமல் பிறந்து, வளர்ந்து, நடுவில் ஒரு தலைவரைப் பெற்று, இப்போது மீண்டும் தலைவனற்ற தேசமாகியிருக்கிறது.

யோசித்துப் பார்த்தால் கொஞ்சம் வியப்பாகத்தான் இருக்கும். 1948ஆம் ஆண்டு வரை இஸ்ரேல் என்றொரு தேசம் கிடையாது.

அது யூதர்களின் மனத்தில்தான் அதுநாளையவரை கருவாக வளர்ந்து கொண்டிருந்தது. திடீரென்று ஒருநாள் பிரிட்டிஷ்காரர்கள் பாலஸ்தீனைக் கழுவிப் போட்டார்கள். அவர்கள்தாம் அப்போது அந்தப் பகுதியை ஆண்டு கொண்டிருந்தவர்கள். ஒரு கூறுக்கு இஸ்ரேல் என்று பெயரிட்டார்கள். அது யூதர்களின் தேசமானது. இன்னொரு கூறு பாலஸ்தீனிய அரபியர்களின் இடமாகவே தொடர்ந்து இருக்கும் என்று சொல்லிவிட்டார்கள். ஆனால் நடந்தது வேறு.

யூதர்கள் இஸ்ரேலை வந்தடைந்தவுடன் விரும்பாத சில அரேபிய தேசங்கள் (எகிப்து, ஜோர்தான், சிரியா, லெபனான், ஈராக்) தலைவர்கள் அந்த பாலஸ்தீனியப் பகுதியை நோக்கி இலைவந்து இஸ்ரேலை எதிர்த்தன. 1948 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்த முதல் யுத்தத்தில் இறுதியில் இஸ்ரேல் ஒவ்வொரு துண்டாகவும் ஓர் அமைதி ஒப்பந்தம் செய்து கொண்டு போரை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்து அந்த ஒப்பந்தங்களின் அடிப்படையில் ஜோர்தான் படை முன்னேறி வந்த மேற்குக் கரை (West Bank) யில் பெரும்பகுதி அந்நாட்டுக்கே சொந்தம் என்றானது. எகிப்துப் படைகள் தங்கிக் கொண்ட காஸா பகுதி எகிப்தின் சொத்தானது. கூறுபோட்டாயிற்று. தன்னிலையை அதோடு முடிந்த தாகச் சொல்லி விலகிக் கொண்டது பாலஸ்தீனிய அராபியர்கள் மேற்கு வழியில்லாமல் தனியே போராட்டத்தில் குதித்தார்கள். முப்பதாண்டு காலத்துக்கு மேலாகத் தொடர்ந்து கொண்டிருக்கும் அந்தப் போராட்டத்தில் அவர்கள் எத்தனையோ விழிப்பு களைப் பார்த்திருக்கிறார்கள். ஆனால் அரபுத்தின் மனதைக் கரைக்கும் ஒரு பெரிய விழிப்பு அங்கே இதுகாறும் ஏற்படவில்லை.

இஸ்ரேல் - பாலஸ்தீன் பிரச்சினையின் வரலாற்றை நான்கு வரியில் சொல்லவேண்டுமானால் அதுமேலே உள்ளது தான். ஆனால் இது நான்கு வரிகளில் முடிகிற விஷயம் இல்லை. நான்கு நூறு வருட சரித்திரச் சிக்கல்களை உள்ளடக்கியது. எத்தனையோ நூற்றாண்டுகளாக உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஊர் ஊராகத் தப்பியோடிக் கொண்டிருந்தவர்கள் யூதர்கள்.

தொடரும்...

– பிரகஸ்பதி –

கிழக்கின் அடுத்த முதலமைச்சர்!

கிழப்பிவரும் உனர்வலைகள் - 3

புதிய கோணம் புதிய பார்வை

கிழக்கு மாகாண முதலமைச்சர் விவகாரம் கிளப்பிவரும் ஆரூப்பாட்டங்கள் அறிந்து ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். முஸ்லிம் ஒருவரே கிழக்கின் அடுத்த முதலமைச்சர் என்று வலையில் கிழக்கு மாகாணத்தில் இருந்து கொண்டிருக்கும் நிலை குறித்து ஆராய்ந்தோம். என்று கடந்த வாரக் கட்டுரை நிலைமைக்கு எந்திருந்தது.

